KACHCHERI
11 OCT 1930
JAFFNA

True copy

Registered as a Newspaper at the G.P.O.

# ஜனதர்மபோதினி

## JANA DHARMA BOTHINY

OR

## NEW JAFFNA.

A Monthly Newspaper

"சமன்செய், சீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

சந்தா விபரம்.
தபாற்செலவின்றி ஒன்றுக்கு ரூ. 1-00
தபாற்செலவுட்பட ,, ,, ,, 1-25
மலாய்நாட்டிற்கு ,, ,, ,, 2-00
வி. பி, சார்ஜ் பிரத்தியேகம்
முற்பணமாகவே அனுப்பவேண்டியது

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| 1 | கலம் முதன்முறை | ரூ. 5-00 |
| $\frac{3}{4}$ | ,, ,, ,, | ,, 4-00 |
| $\frac{1}{2}$ | ,, ,, ,, | ,, 3-00 |
| $\frac{1}{4}$ | ,, ,, ,, | ,, 2-00 |

அடுத்தமுறைகளில் அரைவாசி.
சில்லறை விளம்பரங்களுக்கு முற்பணங்கட்டவேண்டும்.

புத்தகம்—1. } யாழ்ப்பாணம்—தெல்லிப்பழை:-பிரமோதூத ஆவணி புரட்டாதிமீ (1930) செப்டெம் { இலக்கம்—5.

THE WELL-KNOWN

House for Brass Goods.

All Reputable Builders and Contractors buy their supply from us. BRASS LOCKS, PADLOCKS, BRASS HINGES, BRASS BOLTS & BRASS SCREWS from Leading English, German and Continental Makers.

OUR QUALITY IS OUR GUARNTEE.

We have studied local demands and requirements and know as specialists should, what articles would suit out our numerous patrons.

Our experience and knowledge is at their service FREE.

We import "PYRAMID BRAND" brass beds made by the world celebrate makers.

Both in point of quality and value,

We can satisfy you

JUST BUY ONE AND SEE IF WE CANNOT

A. L. M. ABDUL LATIFF

PHONE, 1113, Telegrams "ALMAL"
Nos. 3,16, 130., 3rd Cross Street
COLOMBO.

---

விளம்பரம்.

S. MARCHELIN.
Pawn Broker,
Hospital Road,
Jaffna.

அடைவுபிடிக்க உத்தரவுபெற்றவர் இவ்விடத்தில. தற்கால நாகரீகத்துக்கேற்ற நகைகளும் தங்கப்பவுணும் எந்த நேரமும் பெற்றுக் கொள்ளலாம்

ச. மருசலின்,
ஆஸ்பத்திரி றோட்.
யாழ்ப்பாணம்.

---

முரப்பா! முரப்பா!

தேனில் பாகுசெய்தது. காலையில் ஒழுங்காய் தினப்படி சாப்பிட்டு வந்தால் எவ்வித வியாதியும் அண்டாது.

| | | | |
|---|---|---|---|
| நெல்லிக்காய் முரப்பாய் 1கி, இரண்டு சேர்கொண்டது | .... | .... | ரூ. 2-8-0 |
| ஷை 2கி. ஷை | .... | .... | 1-8-0 |
| இஞ்சி முரப்பா 2 சேர் கொண்டது | .... | .... | 2-8-0 |
| கரும்பு முரப்பா ஷை | .... | .... | 2-0-0 |
| ஆப்பிள் முரப்பா ஷை | .... | .... | 2-8-0 |
| தடியங்காய் முரப்பா ஷை | .... | .... | 1-8-0 |

VYTHYA ASRAMAM,
Agastya Knnda,
BENARES CITY

Packing and Posatage free to those who order a dozen tins at a time.

---

யாழ்ப்பாணிகளே!

ஜனங்களின் முன்னேற்றத்திற்கான ஜனதர்மபோதினியை நம்முன் நாட்டின தயாளகுண மக்களின் உதவியுடன் அதர்ம கஷ்டங்களைப் புடமிட முன்வந்தோர் பாதபேதமின்றி இதில்வெளியிடுவதை ஓர்ம போதகங்களெனத்தள்ளிவிடாது எப்போதிருந்தி ஒடுக்க கஷ்டங்களின்றி இம்மேதினியில் வாழலாமென்ற வாஞ்சையுடன் இனியாவது பிரயாசைப்படுங்கள.

பகைவனுக்கருள்வாய் – நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்.

சிப்பியிலே நல்லமுத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ? நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்குத்திக்
கொடிவளராதோ? நன்னெஞ்சே, (பகைவ,)

வாழ்வை நினைந்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ? நன்னெஞ்சே
தாழ்வுபிறர்க் கெண்ணத் தானழிவானென்ற
சாத்திரங் கேளாயோ? நன்னெஞ்சே (பகைவ)

பாரதியார்.

---

## உயர்வகுப்பாரின் மனோபாவம் மாற வேண்டும்.

(மகாத்துமா காந்தி.)

தீண்டாமையென்பது இந்துமதத்தில் புகுந்து கொண்ட ஓர் கேடுற்ற களங்கமாகும். இந்தத் தீண்டாமை எப்படி உண்டாயிற்றென்பது எனக்குத்தெரியாது. உயர்ந்த சாதியார் தங்களைவிடத் தாழ்ந்தவரை ஒதுக்கிவிடவேண்டுமென்ற நோக்கத்தினால் இது தோன்றியிருக்கக் கூடும். ஆதியிற் தோன்றியுள்ள நான்குசாதிகளுக்கும் இப்பொழுது தோன்றியிருக்கும்

# ஜன தர்ம போதினி.

பிரமோதூதவரு புரட்டாதிமீ.


## பிரித்தானிய நீதி.

ஒடுக்கப்படும் தமிழரின் ஊழியசங்கத்தினர் 1927ம் ஆண்டு ரேயல் கமிஷனருக்கும் பிரித்தானிய அரசுக்கும் எழுதிய விண்ணப்பத்திற் குறித்துக்காட்டியவிசேஷகாரியம் சமத்துவக்கல்வி. இதற்கிடையூறாயிருக்கும் (சலகவித அலங்கோல பழக்க வழக்க நிந்தாட்சணைகளும் சாதிக்கொடுமையும் வெகுதுலாம்பரமாயக் காட்டப்பட்டன.

இவ்விஷயம் நீதிதவறாதபடி நடைபெறச்செய்யுஞ் செங்கோன்மை பிரித்தானிய சக்கிராதிபத்தியத்துக்குண்டு. ஊரவர் எப்படி எப்படி எதிர்பேசினாலும், கோளாறு செய்தாலும், யாழ்ப்பாணம் முழுவதையுந்தான் தீக்கடன் செய்து கீரிமலையில் ஆற்றிற்கரைத்தாலும் பிரித்தானிய நீதி அவராலாளப்படுந்தமிழருக்கு ஒருபக்கந்தாளாது. பிரித்தானிய நீதி தற்போதுள்ள யாழ்ப்பாண மேல் சாதியார் எழுதியவிண்ணப்பத்தில் வெகுவாய் வேண்டப்பட்டிருக்கிறது. இவர்கள் தமக்கு நீதி செயயும்படியே அவர்களைக்கேட்டு எழுதியிருக்கிறார்கள், மேல் சாதியார் தாம் எழுதிய விண்ணப்பத்தில் சமத்துவ தாரதம்மியமற்ற கல்வியுபசாரணை நீதியல்லவென்றும் நீதியற்ற தமது முறையே நீதியென்று கருதியது நீதியோ அவ நீதியோ வென்று யோசிக்க முடியாதவரல்ல. கொழும்புப்பத்திரிகைகளெல்லாம் மேல்சாதிகள் எழுதியவிண்ணப்பத்தில் அவர்கள்கேட்டபிரித்தானிய நீதியைப்பற்றிய சரிபிழையை மெத்தவடிவாய்க்காட்டி எழுதிவிட் [illegible] இன்னும் தாழ்த்திவைப்பதுதான் நீதியென்று யாழ்ப்பாணப்பெரியோர்கருதியதையிட்டு பிரித்தானிய நீதியப்படிப்பட்ட நீதியாகாதெனத் தெளிவாய்க் கூறிவிட்டது பிழையென்பாரா? இல்லை.

இரண்டாம்முறை எமது சங்கம் பிரித்தானியாவுக்கெழுதிய பெட்டிசத்திலும் பிரித்தானிய நீதியையாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்து பொது உரிமைகளை ஒருவர் கூட்டிக்குறைத்து அனுபவிக்கவிடாது எவர்க்குஞ்சரியாய் நிறைகோல்போல அளந்து கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம். இதைப்பற்றியும் கொழும்புப்பத்திரிகைகள் வடிவாய் எழுதிவிட்டிருக்கின்றன. இப்படியே யாழ்ப்பாணத்திற் றாம் மேலோரென்போரும் மற்றவர்களாற் கீழோராக்கப்பட்டோருமான இரண்டு பகுதியாரும் பிரித்தானிய நீதிக்காகவே பெரியவேண்டுதல் செய்கிறார்கள். இது ஒருபுறமிருக்க,

யாழ்ப்பாண வடபகுதிக்குச் சட்டசபையங்கத்தவரும் ஈழகேசரியுமான எங்கள்சேர் P. ராமநாதனவர்கள் சென்றமாசம் லண்டனிலிருக்கும்போது பிரித்தானியருக்கெழுதியவிண்ணப்பப்பிரதியின் முகவுரையிறுதியில் எழுதியவசனத்திலே பெரியஎழுத்திலே (There is no doudt in the minds of the faithful that justice will triumph in the end) கடைசியாக நீதி வெல்லுமென்பது நன்றியுள்ள மனங்களின் நிச்சயம்' என எழுதியிருப்பதை இங்கு எடுத்துக்காட்டுகின்றோம். யாழ்ப்பாணத்தாராகிய எம்மையிட்டுக் காலத்துக்குக்காலம் பலருட்பலவிதமாய்ச் சொல்லிப்போவதைக் காண்கிறோம். இலங்கைச் சிங்களவரையிட்டும் தமிழரையிட்டும் அவரவர் குணவிசேஷங்களையும் தன்மைகளையுமிட்டுப் பலமுறையும் பலரும் பேசவும் எழுதவும் கண்டுள்ளோம். பெரியகோட்டு நீதவான் கந்தாவல அவர்கள் யாழ்ப்பாணத்தாரையிட்டுக் குறைய்ய் எழுதியவசனத்திற்காக யாழ்ப்பாணத்தார் அவரெழுதிய புஸ்தகங்களை வாங்கிச்சுட்டுச்சாம்பராய் அவருக்கு அனுப்பிவைத்தார் யாழ்ப்பாணத்தாரையிட்டு மற்றவர்கள் குறைபேசுவதில் நாம் அவர்களைத் துவேஷித்தல்சரி. ஆனால் அவர்கள் பேசுவது உண்மையானால் அப்படிப்பட்ட குறையை நாம் துவேஷித்துஅதைவிட்டுவிலகுவதேயன்றி குறைசொல்லுகிறவர்களை துவேஷிப்பது எமதுபெரியகுறையாகும்.

யாழ்ப்பாணத்தார் நீதிதேடுகிறார்களா? தமக்கொரு நீதி பிறர்க்கொரு நீதி கீழ்ச்சாதிக்கொரு நீதி தேடுகிறார்களா? தமிழருக்கொரு நீதி சிங்களவருக்கொரு நீதி தேடுகிறார்களா? ரேயர்தியேட்டர் கூட்டத்தார் தேடிய நீதியேது? கௌரவ கனகரத்தினமவர்கள் பெரியகோட்டு வீட்டில் லோட்டொனமூர்மகானுக்குச் சொன்ன நீதியெது? கிறிஸ்தவர்கள் இந்துக்கள் மத பிரிவினையுடன் தேடும் நீதியெது? மாணவர் மகாநாட்டார் தேடும்நீதியெது? யாழ்ப்பாணவலிகாமம் வடக்கார் கடைசியாய் சேர் ராமநாதனவர்கள் மூலம் கவுணரிடம் பேசியபோது கேட்டநீதியெது? அவர்கள் இப்போது சுட்டும் நீதியெது? நம்நாட்டவர்கள் நீதியைத்தேடுவதே எமது வாஞ்சை நீதியே வேண்டப்படுவது சுயநீதியா பொதுநீதியா எதுவேண்டப்படுகின்றது. ஒடுக்கப்படுவோர் ஓலமிட்டு மீட்சிகேட்பது நீதியோ? ஒடுக்குவோர் தமது சுபாவம் அழிகிறதேயென்று அபிநயத்துடன் நடிப்பது நீதியோ? எது வேண்டியது.?

நீதி வெல்லுமென்பது உண்மை. ரோமராட்சியமெங்கே? மகா அலெக்சாந்தரெங்கே? மகா நெப்போலியனெங்கே? எவருக்குச்சுபாவம் நிலைக்கும். எவருக்கு அநியாயம் ஆகடியம் இறுமாப்பு நிலைக்கும். பெரியசாதியென்று ஆகடியம் செய்து எளியவரை உதைக்கும் வலியவரே! எளியாரை வலியார்கேட்டால்வலியாரைத் தெய்வங்கேட்கும். எளியசாதியின் அழுகுரல் வானபரியந்தமெட்டுகிறது. உங்கள் மனக்கடினத்தைவிட்டு மனுஷரை மனுஷராய் மதித்து சுயாதீனத்தின் அடிப்படையாக சாதியடிமையாட்சியெனும் விலங்கையுடைத்து உங்களை முதல் விடுதலைசெய்யுங்கள். அப்போதான் சேர் ராமநாதனவர்களெழுதிய வசனமும் அதிற்கருதிய நீதியும் நிறைவேறும். தமிழரின் பூர்வீகபாரம்பரியமும், நாடுசெழிக்கும் கடவுளின் அனுக்கிரகம் உண்டாகும். பூமிநன்விளைவைக் கொடுக்கும். அப்போதான் நீங்கள் விரும்பும் பூரணசுயாதீனமும் பூரண ஆளுகையும் நடைபெறும். பிரித்தானியர் நீதி செய்யுமுன் நாமே எமக்கு நீதிசெய்யவேண்டும். எங்கள் நீதியொன்றுமே மற்றவர்களின் அநீதியை உடைத்துத்தள்ளும வெள்ளமாய்ப்புரண்டோடும். நீதிசனத்தை உயர்த்துமென்பது வெகுபூர்வமொழி இம்மொழி கிறிஸ்தவர்களின் வேதத்திலிருந்தாலும் எவர் மனதிலும் எப்போதுமுள்ளதொன்று. ஆனால் இதை உணரமட்டும் மனமில்லையோ?

---

## கிராமச்சங்கமும் சாதியும்

எங்கள் சங்கம் டொனமூர் கொம்மிஷனுக்கு எழுதிய விண்ணப்பத்தில் ஒருபகுதிகிராமச்சங்கங்களில் எங்கள் சாதிகள் அடையும் இடைஞ்சல்களைப்பற்றியது.

பொதுவாய்க் கிராமச்சங்கங்கள்புறக்கணிக்கப்பட்ட எங்கள் சாதிகளுக்கு நீதிசெய்வதில்லையெனுங்குறை எங்கும் பேசப்படுகிறதை இங்கேயெழுவது மனத்துக்கமானது. சுயாட்சியத்துக்கு ஆசைப்படுந்தமிழர் ஆளுகை செய்யப்பழகும்படி அரசாட்சியார் கிராமச் சங்கங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிராமக்கோட்டு நீதவான் அல்லது கிராமச்சங்கத்தலைவர் எங்கள் இராசாவின் இடத்திலிருந்து நீதிசெய்கிறவர். அவர் உயர்ந்தசாதியானால் இருந்தசாதிப்பழக்கவழக்கத்தைப் பின்பற்றி உயர்சாதிகள் பக்கஞ் சாய்ந்து எளிய சாதிகளுக்குத் தீங்கு செய்பவராய் இருப்பதாகவே அதில் கருதியிருக்கிறோம்.

இப்படியிருக்கத் தெல்லிப்பழைக் கோவிற்பற்றிலே வேளாளர் தம்மினுங் கீழாய் மதிக்கிற சாதிகளுக்குள்ளேயும் தங்களிற்சிலர் சங்கத்துக்கு வரவேண்டுமென்ற உணர்ச்சி உண்டானது. அதன்படி, கரையார், கோவியர், தச்சர் தட்டார், என்பவர்களுக்குள் ஒவ்வொருவரைத் தெரிந்து எடுக்கும்படி அச்சாதிகளுடன் பள்ளர் பறையர், நளவர் ஆகிய சாதிகள் வெகுவாய் ஆசைப்பட்டார்கள். வேளாளர் இதற்கெதிராய் வேலைசெய்தாலும் இவர்கள் ஒற்றுமையாய் கையுயர்த்தி இந்தச்சாதிகளில் ஒவ்வொருவர் வரத்தக்கதாய்ச் செய்துகொண்டார். மறுபடி இத்தெரிவைப்பற்றி மேல்சாதியாருக்குள்ளே சச்சரவுண்டானபடியினாலே இவ்விஷயம் சுப்பிறீங்கோட்டிலே விசாரிக்கப்பட்டு சாதிக்குச்சாதி ஆள் எடுப்பது சாதி வித்தியாசவளர்ச்சிக்குரியதென்னும் நியாயத்தால் எந்தச் சாதியிலும் சாதி சொல்லாதபடி இரண்டாம் முறை ஆட்களைத் தெரியும்படி தீர்ப்புக் கூறப்பட்டது. இதனால் பழைய தெரிவு நீக்கப்பட்டாயிற்று. புதுத்தெரிவு சமீபிக்கிறது.

இப்போது ஒடுக்கப்படுஞ் சாதிகளுக்குள்ளே ஒருவிதபேச்சு அங்குநடக்கிறது. இதையிட்டு இங்கு காட்டவேண்டியது அவசியம் அதாவது இடைச்சாதிகளான கோவியர், கரையார், தச்சர், தட்டார் இவர்களைச் சங்கத்துவரும்படி கையுயர்த்தியது ஒடுக்கப்படுஞ்சாதிகளான பள்ளர் பறையர் நளவர்தான். கூட்டதோற்றுக்கூடவேயிருந்து தடுத்த வேளாளரை பகட்டை செய்து ஏகமே கையுயர்த்திவிட்டார். இதன் முடிவு வேளாளருடன் சேர்ந்து ஒடுக்கும்படி மற்றச்சாதிகளை அவர்களுக்கு உதவியாக்கிவிட்டதுதான். எப்படியெனில் பாடசாலைச் சமாசனவிஷயத்தில மாவிட்டபுரத்திலுள்ள இரு பாடசாலைகளிலும் இப்பிள்ளைகட்கு எதிரிடை செய்திருப்பது இந்தமூன்று நாலு சாதியாருந்தான். இச்சாதியிலிருந்து கிராமச்சங்கத்துக்கு வந்த மெம்பரான ஆட்களிடம் இதையிட்டு உசாவினபோது இதைப்பேசப்போனால் மூட்டுத்தனமான தமது ஆட்கள் தம்மையும் சருவுவாரென்றும் தாம் அவர்களிடம் எதிர் பேசப்படாதென்றுஞ் சொன்னார்கள். வேளாளரான உயர்சாதியாரின் கீழ்ச்சாம்பிரதிமைகளாயும் குடிமைகளாயும் இருந்து இப்போவேறு சாதிகளுக்குமிடங்கொடுத்து அவர்களாலும் ஆளப்படவேண்டியிருக்கிறது வேளாளர் எமமை அடிமைகளாய் நடத்தினாலும் எமக்குத்தீங்குசெய்யும் மறுசாதிகளினின்று எம்மைக்காத்து வைத்தார். இப்போ எமக்குத் தீங்குசெய்யும் மறுசாதிகளை யடக்கமுடியாதபடி இச்சாதிகளுக்குப் பெலன் கொடுத்துவிட்டோம். ஆனபடியால் இனிமேல் வருகிறதெரிவுக்கு தெல்லிப்பழைக் கோயிற்பற்றுக்கு வேளாளரல்லாத மறு நாலுசாதிகளும் சங்கத்தில் வரும்படி அவர்களுக்காய் கையுயர்த்துவோமா? எங்களிலும் எவராவது கிராமச்சங்கத்தில் அந்தக்கொட்டிலின்உள்ளேபோக இடமுண்டாகுமா? என்றதேன்னிலை மல்லாகம், ப[illegible]யடி, சாத்தனைவத்தை, தெல்லிப்பழை, விராங்கொடை, மாவிட்டபுரம், கலட்டி, இளவாலை, விளான் இந்தப்பக்கத்துப் பள்ள, பறைய, நளவ சாதிகளான சகோதரர்கள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமச் சங்கத்தலைவர் பொதுநிதியிற் கட்டப்பட்ட கொட்டிலின் உள்ளே நுழைய இச்சாதிகட்கு இடங்கொடுப்பாரா? இவ்விஷயத்தில் வேளாளரினுங்குறைந்த மறுசாதிப் பிரதிநிதிகள் என்ன சொல்லுவார் என்று இவர்கள் எல்லாரும் யோசிப்பதாய் அறிகிறோம்.

''பள்ளிக்கூட விஷயத்தில்தான், ஆனால் வேளாளர் எவுதற்படி செய்தார். நீங்கள் இம்முறையு''

(மூன்றாம்பக்கத்தொடர்ச்சி.)

சொல்லுஞ் சைவர்தான் உமக்குஞ்சரி. அவர்களும் சாதிக்கிறிஸ்தவர்களுந் தான் முத்தியடைவர். அதாவது கழுத்தில் ஒரு நூற்கயிறு கட்டி உடுத்த கிழந்துணியின் ஒருதலைப்பின் ஒருமூலையை இழுத்து அதில்முடிந்து திரிந்த பெண்களைச் சட்டையிடப்பண்ணியது அன்னிய குணப்பிரவேசமே அல்லது நீளச்சட்டையிட்டுப் பொட்டிட்டு வெள்ளைத்தலைப்பாகையுடன் வந்து எழிய சாதிகட்கு ஆசனமேவேண்டாமென்று கவர்ணரிடம் சென்றவர்களைச் சட்டை யிடப்பண்ணியது அன்னியகுணப் பிரவேசமே. இவைகள் அன்னிய குணங்கள்தான் பெரியவரே! மதத்துவேஷமும சுயமதப்பித்தும் மீறிய இறுமாப்பும் ஏழைகள்ளும்- நீர்கேட்ட கேள்வியும் முடித்தவகையும் உம்மை உலகுக்குக்காட்டுகிறதன்றி வேறெவர்க்குந் தீங்குவிளைக்காது. மார்க்கஆராய்வும், சரியெனக்காண்பதைச் செய்யுந்துணிவும் புதியகாரியங்களில் அபேட்சையும், சாதியடிமைத்தன மீட்சியூழியமுமே உங்கள் சாதிகளுக்கு மீட்சியாகும். மூர்க்கனும் முதலையும் போலநடந்து நாய்வால்களெனச் சுருண்ட மனதுடனும் துரோகசிந்தையுடனும், உமது ஆட்களிற் கற்ற பெரிய குணமுடைய இளைஞர்களிற் பழிவாங்க நிற்பது உமக்கு அழகல்ல— போய்வாரும் அடுத்தமுறை கண்டாற் சம்பாஷிப்போம்—நமஸ்காரம்... அழுக்காறு வேண்டாம்.

(ஆதிதிராவிடன்)

கடிதம்.

## வேலையில்லாத் திண்டாட்டம்.

எல்லாத்தேசங்களிலும் வேலையில்லாத்திண்டாட்டமேற்பட்டிருக்கின்றது. இங்கிலாந்தை யொத்த மேலைத்தேசங்கள் கல்வி கைத்தொழில் வர்த்தகம் முதலியவற்றிற் றேர்ந்திருந்தும், அநேகர் வேலையில்லா வீட்டிலோய்ந்திருக்கின்றனர். இதன் காரணத்தையென்னவென்றெத்தனையோ ராஜதந்திரிகள் ஆலோசித்து வந்த போதிலும் இது நாளுக்கு நாள் வளர்ந்துவருவதையே காண்கின்றோம். இங்கிலாந்திலித்தகைய மோசமேற்பட்டதிற்குக் காரணம் இயந்திரப் பயிற்சியேயாகும். ஐம்பது அறுபது மனுஷர் ஒரு நாளையிற் செய்ய வேண்டிய வேலையை யந்திரம் ஒரு மணித்தியாலத்திற் செய்து வருவதால் முதலாளிகள் உலகப்பொருட்களைச் சேகரித்து வருபதுபற்றி கைத்தொழில் செய்து சீவனஞ் செய்யும் ஏழைகள் வேலையின்மையால் மிக்க வருந்த நேரிடுகின்றது.

இலங்கையிலுமிந்த இடையூறு தீண்டாமலில்லை. ஆனலிவ் விலங்கை எவ்வகையாக இக்கஷ்டத்தை நீக்கக் கூடுமென்பதே முக்கியமாகக் கவனிக்கவேண்டும். மேலைத்தேச யந்திரங்களாலும் இதரதேசத் தொழிலாளிகளாலும் இத்தேசத் தொழிலாளிகள் வேலையின்றித் திரிதலாயிற்று. முற்காலத்திலெவ்வோர் கிராமங்களிலும் அவற்றிலிருக்குங் குடிகள் தத்தமக்கேற்ற தொழில்களைச் செய்து சீவனஞ் செய்து வந்தார்கள். பெட்டி பாயிழைத்தல் நூல்நூற்றல் நெசவு செய்தல் முதலிய எத்தனையோ தொழில்கள் கிராமங்களிற் றழைத்தோங்கின. அக்காலங்களில் யாவருக்கும் எல்லா நேரங்களிலும் வேலைகிடைத்தது. ஆகவே சமாதானமுஞ் சந்தோஷமுமிருந்தது. அந்நாட்களில் வேலையில்லாத் திண்டாட்டம் சிறிதுமில்லை. பசியினல்வாடியவர் மிகச்சிலரே மற்றோர் செல்வம் பெற்றுச் சுகித்திருந்தார். இல்லற வாழ்க்கையின்பமாயிருந்தது.

"குன்றத்தனையிரு நிதியைப்படைத்தோர்
அன்றைப்பகலே அழியினு மழிவர்"

அன்னியநாட்டு யந்திர அணிகள் வந்ததால் நூல்நூற்றலும் நெசவும் பின்வாங்கின. கத்தி கோடரி செய்யும் கம்மிய தொழிலும் கஷ்டமடைந்தது. ஆகவே நாளாவட்டத்தில் கிராமங்களில் வேலை குறைந்துவிட்டது. இவ்விடருக் கென் செய்வதெனத் தெரியாது கிலேசமடைந்து நகரியையணுகி யந்திரசாலைகளிற் பலர் சேர்ந்து முட்டாள் வேலை செய்து வந்தார்கள். "உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்" புதிது புதிதாக யந்திரங்கள் முட்டாள் வேலைக்கும் கண்டுபிடிக்கப்பட்டமையால் சீமெந்தும் மண்ணுங் கலந்து சேர்ப்பதற்குச் சாணும் யந்திரமும் தடிதூக்கிக் கொடுப்பதற்குப் பாரஞ்சாம்பியும (Crane) இன்னும் மெத்தனையோ யந்திரங்களுங்கூட முட்டாள் வேலைக்குழுட்டுக் கட்டைகளாயிருக்கின்றன. ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும் 100க்கு 75 வீதம தொழிலாளிகளை வேலையிலிருந்து நிறுத்தவேண்டி நேரிட்டது. இவர்கள் என்செய்வார்? கிராமவாழ்க்கையையே சிலாக்கியமெனச் சிந்தித்துத் திரும்பினர் சிலர். கிராமத்திற்குத் திரும்பிச் செல்ல ஆற்றாதவராய் நகரத்திலேயே நின்று திண்டாடினர் சிலர் கொலை களவும் மிகப்பரம்பியது. கிறிமினல் வழக்கு மிகுந்தது சிறைவாசம பெருகியது ஆகவே கணக்கற்ற மனுஷர் பலனற்ற வாழ்க்கையைத் தேடநேரிட்டது.

வேலையின்றிக் கஷ்டமடைவோருக்கு வேலைதேடிக் கொடுத்தல் அரசாங்கத்தாரின் கடமையெனச் சொல்வரோர் சாரார் இன்னோர் சாரார் கொடுத்தலியலாதெனவுஞ் சாற்றுவார். இருதிறத்தாரிலு முண்மையுள்ளது. பொதுநன்மைக்காகவே அரசாங்கமுள்ளது. ஆயின் வேலை தேடிக்கொடுத்தல் அரசாங்கத்தால் முடியாதகாரியம்

வ. அருளம்பலம்

மாதனை
பருத்தித்துறை

## கடிதஉத்தரம்

"தண்டபாசு பண்டிதரின் மதிமயக்கக்கறுப்பு" எனும் விஷயம் பெறறோம். கடிதர் எழுதியது சரியென்றதை நாம் பெரிதும் போற்றி ஒத்துக் கொண்டோம். இப்பத்திரிகையில் இனோர்தலையின் கீழ் தீங்கு பேசுவோரையிட்டு நாம் எழுதியதைக் கடி

தர் வாசித்துக் கொள்ளவும். மகாத்மா காந்திக்கு விரோதமாய் இருப்பவர்கள் "சாதிபேதம் இந்து மார்க்கத்தில் புகுந்து கொண்டதோர் களங்கம்" என்னும்அவர் கொள்கையினின்று அவரைத்திருப்பமுடியாது. கலியாணசுந்தரமுதலியார் சென்ற மாணவர் மகாநாட்டுக்குவந்தபோது அவரையிகழ்ந்து துண்டுப்பிரசுரமடித்துப் பரப்பியவர்கள் தம்நோக்கம் பிழை யென்பவரல்ல. ஆனால் கலியாணசுந்தரரை அவர் நோக்கத்தை அவர் செய்யத்துணிந்ததை யெவரும் எதிர்க்க மாற்றமுடியாது ஸிறீ கிறீஸ்து பகவான் உலகில் இருந்தபோது எழியசாதிகளைச் சீஷராக்கி எழியவருடன் கூடி உண்டு அவர் கட்காகச் சீவித்திராவிட்டால் அவரையிட்டுத்திங்கு பேசியிருக்கவும் மாட்டார்கள். ஸ்ரீ மான் சிவபாதசுந்தரமவர்களையிட்டு எவர் என்ன பேசினாலும் அவரின் சற்குணம் நேர்மை உண்மைக் காய்ப்பாடனுபவித்தல் எனுஞ் சுகுணங்களாவது சாதி வித்தியாசம் இந்துமார்க்கத்தைச் சீரழிக்குங்கறையான் எனும் உண்மைத்தீர்மானங்களாவது மாறப்போவதில்லை. ஆகவே 'பசையில்லாத வெள்ளெலும்பைக் கவ்விக்கடித்துப் பல்லசைந்தும் பசிதீராமற்" போவதிலும் ஸ்ரீமான் சிவபாதசுந்தரமவர்கள் கொள்கையின் மாணபியத்தை விளங்கி வியாசங்களையனுப்பி மதிமயக்கறுக்குமாறு கடிதரைக்கேட்கிறோம்.

பத்திராதிபர்

---

# புதினக்குறிப்புகள்.

:o:

**பெண்ஆணாகமாறியது.** பாணந்துறையைச்சேர்ந்த டோரா நாணயக்கார என்ற சிங்களப்பிள்ளை வீட்டைவிட்டு ஆண்வேஷ மணிந்தபடி றேயில் மார்க்கமாக கண்டியைச் சேர்ந்தாள். அங்கு தான் சேர வேண்டிய கிராமத்திற்குப் போக வழியறியாதவளாக ஒருபையனை உதவிக்கழைத்தாள். நடந்து செல்ல முன் தேத்தண்ணீர் குடிக்கும்படி அவனை ஒரு கடைக்கு அழைத்துப் போகும்போது அவளின் சாயலும் நடையும் பதுக்கமும் சந்தியில்நின்ற பொலிஸ்காரனுக்குச் சமுசய மளித்ததால் உடனே பிடிபட்டாள்.

* * *

**ஆகாயத்திற்தற்கொலை.** தன்காதலி தன்னை விவாகஞ்செய்ய மறுத்து விட்டதாக எழுத்தில் அறிவிக்கப்பட்ட ஆகாயவிமானி யொருவர் சிலநாட்களின் முன் ஆகாயத்திற் சென்று அவளுடைய வீட்டிற்கு நேரே பறந்து சென்று விமானத்திலிருந்து தலைகீழாய்க்குதித்து தற்கொலை செய்தார்.

* * *

**புயற்சேதம்.** அமெரிக்காவுக்கணித்தான சன்ரோடொமிங்கோ என்ற தேசத்தில் சமீபத்தில் நிகழ்ந்த புயல் வெள்ளப் பிரவாகம் முதலியவற்றால் 1500 பேர் மடிந்ததாகவும் 30,000பேர் வீடின்றி யலைவதாகவும், 5000 வீடுகளுக்கு மேற்சேதமுற்றதாகவும் பத்திரிகைகள் கூறுகின்றன.

**கடலிற் புதையலெடுத்தல்.** 7வருடங்களின் முன் சமுத்திரத்தில் ஆழிவாய்ப்பட்ட "எகிப்து" என்ற கப்பலானது அமிழ்ந்த சரியான இடத்தை இப்போகண்டு பிடித்திருக்கிறார்கள். இக்கப்பல் 1,600,000 பவுண 3பெறுமதியான தங்கத்தகடுகளுடன் அமிழ்ந்தபடியால் 600 அடிக்குக் கீழ்இருந்த போதிலும் இயந்திர சுளியோடி மூலம் கீழ்ச்சென்று அறைகளைத்திறந்து திரவியத்தை மேலுக்குக் கொண்டுவர எத்தனிக்கிறார்கள்.

* * *

**மரணம்.** 30 ம் திகதி காலை 8 மணிக்கு கோட்டைஸ்டேசனுக்குச் சமீபத்தில் நீக்கல் தீயேட்டரென்னும் படக்காட்சிச்சாலைக்குப்பின்னால் 40 வயதுள்ள ஒரு தமிழ்மனுஷன் றெயிலில் அகப்பட்டிறந்தான். சோதனையில் அவன் கயரோகவியாதியால் தானே தண்டவாளத்திற் படுத்து இறந்ததாக முடிவு செய்தனர்.

* * *

**கச்சேரிமாற்றம்.** முல்லைத்தீவுக்குப்பதிலாக கச்சேரியை வவுனியாவில் ஸ்தாபிப்பதற்கு சார்பாகவும் எதிராகவும் வெகுகாலமாக தர்க்கங்கள் நடந்தன. இதன்பேரில் நியமிக்கப்பெற்ற கொம்மிற்றிக்காரர் இது வவுனியாவு மாற்றப்படல் நல்லதென்று எழுதியிருப்பினும் அவருள் சிலர் அதுசரியல்லவென்றும் சாற்றுகின்றனர்,

* * *

**விதானைக்கு உலக்கை.** அம்பலாங்கொடையில் விதானையொருவரை உலக்கை கொண்டு தாக்கினதாக ஒரு வழக்கு விதானையால் தொடுக்கப்பட்டிருக்கிறது.

* * *

**பன்றியென்றெண்ணிச்சிநேகிதனைச் சுடுதல்** சென்ற 24-ந் திகதிஇரவு வதுளைக்குச் சமீபமாக இருவர் கூடிப்போய் பிரிந்து இருவழிசென்று பன்றிக்காகப் பதுங்கியிருக்கும்போது ஒருவனை மற்றவன் பன்றியென்று தப்பிதமாகவெண்ணிச் சுட்டு வீழ்த்தினான், கவலையீனக் கொலைசெய்ததாக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

* * *

**44வயதில் 22 வது பிள்ளை.** ரியூகாசில் என்ற நகரத்தில்44 வயதுள்ள ஒருபெண் 22 வது பிள்ளையைச் சிலநாட்களின் முன் பெற்றாள். மூத்தபிள்ளையின் வயது இப்போ 28 ஆகிறது.

* * *

**உலகத்திற் பெரியகுடும்பம்.** சுவிற் செர்லாந்து தேசத்தில் உவிக்கி என்ற துரையின் மனைவி 28. வது பிள்ளையைப்பெற்றிருக்கிறா ஒன்றேனும் மரிக்கவில்லை படத்திற் காணப்படும் பெற்றாரின் தோற்றப்படி இன்னும் பிள்ளைப் பெறக் கூடும் போற் தெரிகிறது.

* * *

அவர்கட்காய்க் கையுயர்த்துங்களென்று நாங்கள் சொல்லப் பயப்படுகிறோம். ஏனென்றால் இச்சாதிகளும் முரட்டுத்தனமான ஆட்களாயே தெரிகிறது. வேளாளரின் கீழுமன்றி மற்றவர்கீழ் அடிமையாயிருக்கவேண்டாம் ஆகவே இந்தச் சாதிகளுக்காய்க் கையுயர்த்தவேண்டாமென்றால் அது மேலான பார்வையல்ல, கீழான பார்வையாயிருக்கும். இவர்களுங் குறைநினைப்பர். ஆகவே வேளாளர் அல்லாத சாதிகளுக்காய்க் கையுயர்த்தும் விஷயமாய் அவரவர் இட்டத்துக்கே நாம் விட்டுக்கொடுக்கிறோம். "ஏறச் சொன்னால் குதிரைக்குக்கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக்கோபம்"

தெல்லிப்பழைக் கோவிற்பற்றிலுள்ள பள்ள பறைப நளவ சனங்கள் தங்கள் முன்னேற்றத்திற்குப் பங்கம் வராதபடி ஒருவருக்காவது கையுயர்த்தப்போகாதிருப்பதே புத்தியென ஒருவர் சொன்னார். அது புத்தியாகாதென்று யோசிப்பவரும் உண்டு ஆனால் வேளாளர் எங்கள் சாதிகளில் அன்புடையவரும் மறுசாதிகளிலும் பார்க்க எமக்கு அதிக ஆதரவுடையவர்களுமான படியினாலே மற்றவர்களிடம் குட்டுப்படுவதிலும் பார்க்க வேளாளரிடம் குட்டுப்பட்டிறப்பது பெருமையாகும் என்றும் பேசுகிறார்கள். கிராமச்சங்கத் தலைவர் இதைப்பற்றி ஒரு கூட்டங் கூடினால் நல்லதென்பது எமது அபிப்பிராயம்

---

## சமாசனமென்பது நஞ்சாதிக்குப் பெருமையா?

மாணவன்: ஐயா! சமாசனமென்பது நஞ்சாதிக்குப் பெருமையா?

நக்கன்: உம்சாதியெது?

மாண: பள்ளசாதி.

நக்: ஏன் பள்ளசாதியென்கிறீர்?

மாண: அப்படிச்சொல்வதுதான் ஊர்வழக்கம்.

நக். ஊரவர் சொல்லுகிறபடி சொல்லுகிறது உமது விருப்பமா அல்லது நீரே பள்ளச்சாதியாயிருக்கிறீரா?

மாண: எனக்குத்தெரியாது. அப்பு ஆத்தை பள்ளராம். நானுமவர்பிள்ளையானாற் பள்ளன்தானே.

நக்: சிலருக்கு தாம்பள்ளர் பறையரென்கவெட்கம். ஏனென்றால் தாம் எளியசாதியாரென்பது அவரெண்ணம். அப்பு ஆத்தை பள்ளராம் என்பதால் அவர்கள் பள்ளரென்பது உமக்கு வெட்கமோ? நிச்சயந்தெரியாதோ? நானோ பறையன் என்று சொல்வதால் வெட்கப்படேன். உமக்கு ஒன்று சொல்லுகிறேன், தம்மைப்பெரிய சாதியென்று ஒருவர் சொல்லுவதால் அவர் உயர்ந்தோராகட்டும். அதால் நீராவது நானாவது குறைந்த சாதியாகமாட்டோம். அப்படி மற்றவர்கள் சொல்லுவதால் எமக்கு ஆகப்போகுங்கதியேதாகதியாகாது. சரி! நீர் கேட்பது என்ன? உமது பிள்ளைகள் சரிக்கிருப்பது உமது சாதிக்குப் பெருமையோ வென்கிறீரா அல்லது உமது பிள்ளைகள் பாடசாலையில் ஆசனம்பாவிப்பது பெருமைக்கோவென்றுகேட்கிறீரா அல்லது ஆசனம் உமக்குப்பெருமையோ வென்று கேட்கிறீரா?

மாண. சரிக்கிருப்பது என்சாதிக்கும் பெருமையோ வென்று கேட்கிறேன்.

நக் சாதிக்குப் பெருமையோ வென்கிறீரா சாதிப்பெருமையோ வென்கிறீரா அல்லது சாதியாற்குறிக்கப்படும் மக்கட்கே பெருமையோ வென்கிறீரா?

மாண. சாதியாற் குறிக்கப்படும் மக்கட்கே பெருமையோ வென்றுதான் கேட்கிறேன்.

நக். எமது ஊர்களிலுள்ளவர்களினாற்பெருமையடையார் ஏனெனில் அங்கு வீடுகளிலும் பாடசாலைகளிலும் ஆசனப்பழக்கமும் வசக்கமும் உண்டு. ஆசனம் புதிதாகத்தோற்றும் பகுதிகளுக்கு அது பெருமையாயிருக்கலாம். அப்படியான இடத்திலேதான் ஏறவும் ஆசை இறக்கி இருத்தவுமாசை. நீர் கருதுவது எமதுபிள்ளைகள் மற்றவர்களுடன் சமனாய் இருப்பதைத்தானே!

மாண ஆம் அதைத்தான், அது பெருமையோ!

நக். உமதுசாதிப்பிள்ளைகளும் எமது சாதிப்பிள்ளைகளும் வெகுகாலங்களாய்ச் சமனாயிருந்து படித்து வருவதை நீர் அறியீர்போலும்.

மாண நான் மாணவன் எனக்குத்தெரியவில்லை

நக். நீர்மாணவரா? வயது ஏறியவராய்த் தெரிகிறதே!

மாண நான் பழையமாணவன். அதோ இருக்கிற பாடசாலை எமது சொந்தம்.

நக். ஓ! அப்படியானால் அப்பாடசாலை 10 வருடங்களின் முன் இல்லையே. பின்னை எப்படி நீர் பழையமாணவனானீர்.

மாண புதுப்பள்ளிக்கூடமென்றாலும் பழையமாணவனென்பதெனக்குப் பெருமை.

நக். ஆகா! அப்படிச்சொல்லுமேன். அதுதான் நீர் சமாசனம் பெருமாசனமோ என்று கேட்பது. சரி அந்தப்பாடசாலையிற் சமாசனமுண்டா?

மாண. ஆம்! எல்லாருஞ்சமனாய்த்தான் இருக்கிறார்கள்.

நக் சகலசாதிகளுமோ?

மாண. இல்லை. எமது சாதிகளல்லாத மற்றவர்களங்கில்லை.

நக் அப்படியானால் இதுபுறம்பான பாடசாலையோ?

மாண. எமதுசாதிக்கென்று புறம்பான பாடசாலையிது. மறுசாதிகட்கில்லை.

நக். மறுசாதிகட்கிடமில்லையோ? மறுசாதிகள்வருவதில்லையோ?

மாண. மறுசாதிகட்கிடமில்லையென்பது எனக்குப் பெருமை.

நக். ஓகோ! அப்படிச்சொல்லுமேன் அதுதான் நீர் சமாசனம் உமதுசாதிகட்குப் பெருமையோ என உசாவவந்தீர் சரி சமீபத்திலுள்ள அரசினர் பாடசாலையில் உமது பிள்ளைகட்கிடமுண்டா?

மாண அங்குள்ளவரைக் குற்றப்படுத்துவது சீவ இம்சையாகும். இடமுண்டென்று சொல்லுவது எனக்குப்பெருமை.

நக ஆகா அப்படிச்சொல்லுமேன்! அதுதான் சமாசனமென்பது உமக்குப்பெருமையோ என்பது

மாண. இல்லை. கேளும்! இது வீண்கோளாறு இச்சாதியாழ்ப்பாணத்திற் தோன்றினபின் "நம்சாதியத்தவருள் மரியாதைக்குடன் பட்டவர்கள் ஏனையவருடன் அபசெயக்கேள்வியோடிசைந்து இழுபடுகிறார்கள்"

நக். அப்படியா? "அபசயக்கேள்வியோடிசைந்து இழுபடுபவர்" மரியாதைக்குடன்பட்டோர்தான். மரியாதையுடன் கோடியில் நின்று மாசங்களின்முன் நாச்சியார் கொடுத்த சிரட்டையையேந்தி நிற்பதும் நாள்வீதம் நாய்போல ஒருகவள வெச்சிலுக்குப்பல்லைக்காட்டி இடிபட்டு அடிபட்டு நிற்பதும் எமது சாதிகளின் மரியாதைக்குடன்பட்ட இழுபாடுதான். மடையனொருவன் பள்ளிக்கூடத்துக்கு பொடியனை விடட்டாம். நயினார்தயின் பிள்ளைகளுடன் போகட்டாம். மட்டிப்பயல் என்று சொல்லி கஞ்சி வடிக்குமட்டும் ஒற்றைக்காலிற்தூக்கும் எமது சாதியத்தவர் மரியாதைக் குடன்பட்டவர்கள்தான்,

மாண. இல்லை நீங்கள் கோவிப்பதாய் தெரிகிறது, பாரும் "பஞ்சமசாதி, அழுக்குப்படிந்தசாதி, நித்திய தீட்டுடையசாதி, யென்றின்னபலவாறான அபசெய சொற்பிரயோகங்களை இச்சமாசன விஷயம் உண்டாக்கிவிட்டது நம்சாதிக்குப் பெருமையா" என்று தானே கேட்கிறேன்.

நக். பஞ்சமர், நீசர், தீட்டுடையவர், நித்திய ஆசௌசமுடையவர், புலையர், பிணியுடையவர் என்று சொல்லி எளியவேலைகளைக்கற்பித்து, அடிமைவேலைகளைப் பலாத்காரமாய்ச் செய்வித்து நாய்க்கோலமாக்கி வைத்துவிட்டது சமாசனமென்கிறீரா? அல்லது இப்படியேயிருக்கவிடாது கண்விழிக்கச் செய்வது சமாசனமெனகிறீரா? சகதியில் இருந்த, சருகிலிருந்த உம்மை எடுத்தபின சகதி என்ற சொல்லைக்கேட்டு அருவருக்கிறீரா. ஆசனத்திருப்பதால் அசுத்தத்தினின்று விலகிவருவதையுணராது அசுத்தமொன்று சொல்லப்படுவதால் அருவருப்புண்டாகிறதா? சமாசனமென்ற சொல்லுத்தான் உமது வேதங்களிற்கூட உம்மைத் தீட்டுடையவனென்று சொல்லுகிறதா? ஆயிரமாண்டுகளாய் உம்மை ஒடுக்கிவைத்தது நேற்றுவந்த சமாசனப்பிரமாணமா?

மாண. என்ன ஐயா! "முன்னையநாட்களிலும் தற்காலம் எதிரிசைகளிலுமுள்ள பெரும்பான்மையோரிடத்தும் அறிவுமுதிர்ச்சியாற் சாதித்துவேஷமற்று ஒருவரோடொருவர் அன்னியோன்னியமாக வசதிக்கேற்ற விதமாயும் சுயாதீனமுறைகளை யனுட்டிப்பிற்கொண்டிருக்கும் இக்காலத்தில் மேற்படி சமாசனமென்று புதியகேள்விபோற்பாந்த கலகங்களை மூட்டியது நம்சாதிக்குப்பெருமையாகுமா?"

நக் உமது அமலிற்சாதித்துவேஷமற்றோர் உமதுசாதிப்பெண்சிலைப்புச்சேலையுடுத்துப்போக அதை உரிவித்துச்சுட்டார்? சிலரோட்டுக்காற்போகப்படாதெனவும் முழங்காலுக்குக் கீழே வேட்டிகட்டப்படாதெனவும் அங்கவஸ்திரம் சட்டை முதலியன இனம் பெண்கள் தானுமணியப்படாதெனவும் சொல்லி கட்டிவைத்து செய்யாத இம்சையெல்லாம் செய்து வந்ததெல்லாம் அறிவுமுதிர்ந்து அன்னியோன்னியப்பட்டோ? ஏழாலையில் எம்மவரை எறிந்து கொன்றும், புன்னாலைக்கட்டுவனில் காவடியெடுத்துப்போனோரை அடித்துத்துரத்தியும், மூளாயிற்குடியெழுப்பி, கொட்டில்சுட்டு, கிணறுமூடி அந்தவூர்சனங்களை மாசக்கணக்காய் வலசைவாங்கச்செய்தும்வருவ அன்னியோன்னிய அறிவுமுதிர்ச்சியசாதித்துவேஷமற்றோ? கோப்பாய் அரசினர்பாடசாலையில் பொதுப்பிள்ளைகள் சேரவிடாதபடி தடுத்துவைத்து அதைவிட்டும்தனதுபிள்ளையையிட்டும் பெட்டிசம் போட்டவரை இலக்ஷியமாய் கையப்புடைத்தது அறிவுமுதிர்ச்சியாலா? அன்னியோன்னியத்தினலா? அந்த ஆசனபோசன வசதி செய்ததும் பிழையென்பீரா? அதைவிட்டு அரசாட்சியார் அறியும்படி செய்ததும் பிழையென்கிறீரா? இவைகலகமின்றி எப்படியாகும்? கலகமின்றி எந்த உரிமைதான் உமது ஆட்கள் அடைந்துகொண்டார்? காந்தியடிகளின் ஊழியக்கலகத்தை உண்டாக்கியதே! அவர் முயற்சியை வீணென்பீரா? அவமானமென்பீரா? ஒடுக்கப்படுந்தமிழரின ஊழியசங்கமும் மாணவர் மகாநாடும் செய்யும் கிருத்தியங்களால் உண்டாகும் கலகங்களின் பயனை நீர் உணருவீரா? அவைகளின் தொண்டுகள் உமக்கு உவப்பாகுமா?

மாண. அப்படியானல், 'தன்பாட்டில் வரும் மாற்றங்கள் கலகத்துக்கிடமின்மையாய்ச் சீர் வருவனவாகும்' முன்னையநாட்களிலும் தற்போது எத்தனையோ மடங்கு உலகமக்களின் முரணானகொள்கைகள் மாறுதலடைந்து உயர்சாதி தாழ்ந்தசாதியென்றபேதமும் பலமாற்றமடைந்து கொண்டுவர எங்களுக்குச்சமாசனம் வேண்டுமென்று இரந்து நிற்பது மக்கள் வரிசைக்குப்பெருமையாகுமா? அன்றி நஞ்சாதிக்குப்பெருமையாகுமா?

நக். மக்கள் வரிசைக்கு இரந்து நிற்கவேண்டுமென்பதுதான் ஒடுக்குவோர் நோக்கம். ஆசனம் பள்ளிக் கூடங்களில் இரந்து பெறுகிற்கலகம் நெருப்பு மூளாது.

ஆசனத்துக்கு இரப்பது இகழ்ச்சி சமாசனம் எமது சொந்தமன்றி பிச்சையல்ல எதுதான் தன்பாட்டில் வந்தது? சீவிக்கட்டாமற் கள்ளுவருமோ? கொட்டாமல் ஒலிவருமோ? ஊட்டாமற் பால்வருமோ? மின்சாரம், கம்பியில்லாத்தந்தி, தூரதிருஷ்டியந்திரம் இவையெல்லாம் தன் பாட்டில்வந்ததோ. தன்பாட்டிற் சுயாதீனம் வராது அடிமைத்தனம் வரும் தன்பாட்டிற் கல்விவராது. மௌட்டீகம் வரும். பண்டைய உலகமக்களின் முரணான கொள்கைகளென்று சொல்லாதேயும். அந்தக்காலம் அவைகளை முரணென்றோரைத்தான் உம்மைப்போன்றோர் கொலையுஞ் செய்தார். பிள்ளைகட்கு ஆசனம் பெருமையோ எனறால் உமது புறம்பான பாடசாலையில் ஆசனமேனோ?

மாண. இல்லை உமக்கு இதுபோதாது. இது ஆருக்குப் பெருமையென்றால் நஞ்சமயத்தில நின்று நிலைபிரிந்து தத்தி அன்னியப்பிரவேசஞ் செய்து சட்டைகளையுமிட்டுக்கொண்டாற் சாதியும் மாறிவிடுமென்று நம்பி இழுமாந்து திரியும் ஆட்களுக்கே இச்சமாசனப்பிச்சை பெருமையாம் அறியும். இதுதான் கடவுளாணை உண்மை.

நக். ஆகா! அப்படியா! நீர்கண்டு பிடித்தது பெரியகாரியம். இதுவேலையில் ஒருவரும் இன்னுங் காணாதது. நீரானமட்டை கண்டு பிடித்துவிட்டீர். உமக்குச் சைவமுமில்லை மோட்சமுமில்லையென்பது உமது மத உபதேசமென்று சொல்பவர்தான் உமக்குச் சோடு. அதுநிற்க அன்னியப்பிரவேசமென்கிறீரே அது அன்னியமதப் பிரவேசமாகும். சகல மதத்தினருக்கும் தன்மதமல்லாத மதமெல்லாம் அன்னியமதம். அன்னியமதப் பிரவேசஞ் செய்பவரெல்லாம் நரகிடைப்படுவர். அதாவது கிறிஸ்தவன் அன்னியமதமான இந்துமதம் புகுந்தால் முத்தியில்லை. இந்துமதமான பழைய புதிய சைவமதத்தினரன்றி உலகிலுள்ள மறுமதக்காருக்கெல்லாம் முத்தியில்லை. உமது ஆட்களுக்கு முத்தியுமில்லை சைவமுமில்லை யென்று

(அநுபந்தம் பார்க்குக.)

## கேள்விச்செவியரும் தீண்டுபேசுவோரும்.

இவ்விருவரும் அண்ணன் தம்பி. இவர் குணங்கள் எல்லாம் விசேஷமாகப்பற்றிய வைகளாகவேயிருக்கின்றன. பத்திரிகைகளில் ஒருவர் அவசியமின்றி இன்னொருவரைத் தீண்டு பேசிக்கொண்டேயிருப்பதைக் காண்கிறோம். தீண்டு பேசுகிறவர்களும் கேள்விச்செவியரும் பத்திராசிரியர்களின் மனப்பான்மையையும் இடத்தையும் கண்டதும் தமக்கு ஏற்றபடியெல்லாம் எழுதிவிட வசதி ஏற்பட்டதையிட்டு மிகவுந்துள்ளிக்குதித்து நடனமிட்டுத் தலையாட்டி வேண்டிய வேண்டியபடியெல்லாம் எழுதி வைக்கிறதையிட்டு வாலையாட்டி சாக்கால் மூக்கைத்தொட்டு பெரியமனுஷரை அறிவாளிகளை போக்கியனாக கண்ட கண்டபடி எளனஞ் செய்து கெக்கெட்ட மிட்டுச்சிரித்துத் தம்முட்புளகிர்தங்கொண்டு,, பசையில்லாத வெள்ளெலும்பைக்கவ்விக் கடித்துப் பல்லசைத்தும் பசிதீராமற், போவதைப் பார்க்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் இரண்டொரு பத்திரிகைகளிலும் கொழும்பு ஆங்கில பெரியபத்திரிகைகளிலும் ஒருவரையிட்டுக் கேள்விப்பட்டோமென்று யோசனையின்றி உண்மையாலும் பொருண்மையாலும் வேணுமென்று தீண்டு பேசி வருகிறவர்களின் கடிதங்கள் ஒதுபோதும் ஏற்றுக் கொள்ளப்படுவதேயில்லை. அசங்கிய அசப்பிய விஷயங்களையுடைய பத்திரிகைகளை நடத்துகிறவர்களே இவ்விஷயத்திற் பெரிய குற்றவாளிகளாகின்றனர். அறிவு குறைந்த சிறுகவாசிக்கத் தெரிந்த அல்லது தெரியாத நாட்டுமனுஷர் சிலவித அகோர உட்டீக் கொதி கொண்டு அவமானஞ் செய்யம் நோக்கத்துடன் குட்டிப்பத்திராதிபர்களையணுகுவது இயல்பு. ஆனால் பத்திராதிபர்மார் சில ரூபாய் கட்கோ தம்மனப்பான்மையைக்காட்டவோ பத்திரிகையில் இடமளிப்பவோ வெகு சந்தோஷத்துடன் மனுஷரான மனுஷர் (மிருக மனுஷருமுண்டு) வாசிக்கக் கையிலெடுக்கத் தொடவிரும்பாத கெட்டபாஷைகளில் கடிதங்களை விஷயங்களை வெகுசந்தோஷத்துடன் பதித்து வெளியிட்டு விடுகின்றனர். இவ்வித தீக்குணமே நம் நாட்டவர்குணமெனல் குற்றமாகாது.

தாம் கேள்விப்பட்டோமென்று சொல்லி நடவாத ஒருகாரியத்தைச் சிருஷ்டித்து ஒருவன் எழுதினால் எழுதியவனின் எழியநோக்கம் தமது நோக்கத்துக் கிசைவதைக் கண்டோரன்றி மற்றவர் ஆராய்வின்றியதை யேற்றுக்கொள்ளார். பத்திராசிரியர் மாரும் அப்படியே. மற்றவர்மேற்கொண்ட குரோதங்களை இவ்வித அருவருத்த முறையிற் பாவிப்பதைவிட்டு அதற்கென்று செலவழிக்கப்படும் நேரத்தையும் மைபேனைகளையும் முத்திரை காயிதஉறை என்பவைகளையும் அச்சுக்கூடம் பத்திரிகைகளையும் மரியாதையுள்ள நற்காரியங்களை வெளியிடுஞ் சற்சனர் கூட்டுறவுகளிற் செலவிடும்படி புத்திசொல்லுகிறோம். தாழ்ந்தசாதியாரென ஒடுக்க மனுபவிக்குஞ் சாதியாரும் மற்றவர்கள் செய்யும் பிழைகளை யெடுத்துக்காட்டும் நற்கருத்தையுத்திற் பொய்யும் அவதூறும் கலந்து மற்றவர்களையிட்டுத் தீண்டுபேசுஞ் சோம்பேறிப் பண்ணைகளாகாதபடியிருக்கப் புத்தி சொல்லுகின்றோம். கேள்விச்செவியர் காதிற்றீண்டுபேசி அவர்களைப் பிடித்துப் பாவைக்கூத்தாட்ட அனேகர் வழிகண்டுபிடித்து விட்டதும் ஒரு பெருந்தீங்கு பத்திராதிபர்மாரின் மனப்பான்மைக்கண்டு கடிதர்கள் எழுதியனுப்புவதைப் போலவே கடிதாக்களானபண்ணை மனமுடையவர்களின் மனப்பான்மையைக்கண்டு அவர் காதிற் குசுகுசென்று ஓதிவிடும் துர்க்குணப்பிசாசுகளும் இதற்கென்று வெளிப்பட்டுத்திரிகின்றன. ஆகவே மனுஷர் ரடைய வேண்டியவழிகள் தீண்டுபேசுவதும் அவசியமின்றி வேணுமென்று கோள் மூட்டுவதுமல்ல. அனேக நற்குண நற்செயலாளர் கோட்சொல்லிகளுக்கும் தீண்டுபேசுவோருக்கும் இடங்கொடுத்துத் தம்மைப்போன்ற சகுண மனுஷரையிட்டு பிழையாய்விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். நிறக்கண்ணாடிகளைப் போட்டுப்பார்த்துக் கொள்வோர் அப்படிப்பார்க்காதிருக்கவும் காமாலைக் கண்ணரானோர் அவ்வியாதி தீர்த்துகொள்ளவும் விரும்புகிறோம். எமதுசங்கம் எம்மவர்தம் சுயஉரிமையையனுபவிக்க விரும்புவதன்றி மற்றவர் உரிமைகளைக் கொடுக்குஞ் சங்கமல்ல. தம்மை மிட்டுப் பெரிதாய் நினைத்துத்தீண்டுபேசுவது விசேஷமாய் எம்மோர்களுக்கு வெகுதீங்காகும். "மென்மைக்கு முன்னது தாழ்மை. விழுதலுக்கு முன்னது மனமேட்டிமை." (சுபுதி)

முதலாம்பக்கத்தொடர்ச்சி.

ரக்கணக்கான சாதிகளுக்குப் வேற்றுமையுண்டு. தீண்டாமையின் சாதாரண தன்மையானது தீண்டாதாரைத் தொடக்கூடாது. அவரை அவருடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்ற அளவோடு நிற்கிறது. அதன் கொடிய தன்மையானது கண்ணாற் பார்க்கவும் கூடாது என்ற அளவுக்குக்கொண்டுவிடுகிறது. தீண்டாதார் குறித்த ஒரு தூரத்திற்குள்கிட்ட வந்து விட்டாலும், அல்லது அவர்பார்வைபட்டாலும் உயர்ந்த சாதியார் தீட்டுப்பட்டவராகி விட்டார் என்று தென்னாட்டில் கருதப்படுகிறது. ஆறுகோடிபேர் தீண்டாதர் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதுமிகைப்படுத்தக்கூறும் கணக்கு என்பது என் அபிப்பிராயம்.

தீண்டாமைக்கு ஆதாரமில்லை. இந்து வேதங்களையும், பிற இந்துமதக்கிரந்தங்களையும் நான் நம்புகிறவன். அவைகளில் எனக்குப் பக்தியுண்டு எனக்கு மதப்பற்றுமுண்டு இந்துமதக்கிரந்தங்களை அறிந்துகொள்ள முயற்சியும் செய்திருக்கிறேன். ஆனால், இந்தக்கொடிய தீண்டாமை வழக்கத்திற்கு எவ்வித ஆதாரமும் அவைகளில் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. ஸ்மிருதிகளில் சந்தேகத்திற்கிடமான சில வசனங்கள் இருக்கின்றன. இவைகளைத்தவிர வேறொன்றையும் காணேன். இந்துமதத்தின் தாராளக் கொள்கைகளுக்கு இந்தத் தீண்டாமை முற்றிலும் முரணானதாகும். எல்லா ஜீவன்களும் ஒன்றே என்ற உயரியதத்துவத்தை உலகினாக்குப்போதிப்பது இந்துமதமேயாம். ஆனால் இந்த உயரியதத்துவத்தைக்கொண்டு எனக்கு ஆறுதல் அடையமுடியவில்லை. இந்துமதத்தைச் சேர்ந்தவர் தங்களைப் போலவேபிறந்த ஒரு சிலரை ஒதுக்கிவைப்பதென்றால் மேற்படி தத்துவம் என்ன சாந்தியைக்கொடுக்கமுடியும்?

ஆனால் இந்தத்தீண்டாமை விரைவில் ஒழிந்துவிடும் என்பது நிச்சயம். இதனால் உண்டாகும் தீமை இந்து சமூகம்நனகு உணர்ந்திருக்கிறது இந்தத் தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துவதற்கென்று நூற்றுக்கணக்கான தொண்டர்கள் முன்வந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற சுவாமி சிரத்தானந்தரும், லாலாலஜபதிராயும் இத்தீண்டாமை ஒழிவுக்காகப் பெரிதும் பாடுபட்டனர். வைதிகர் என்று பெயரெடுத்திருந்த பண்டித மதன்மோகனமாளவியா தமுடைய செல்வாக்கைத் தீண்டாமை ஒழிவுக்காக உபயோகப்படுத்திவருகிறார். எங்கும் இச்சீர்திருத்த முறை அபிவிருத்தியடைந்து வருகிறது தீண்டாமை ஒழிந்து இந்துமதம் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நகராபரிபாலன சபைகள் இதற்காகவேண்டிய கடமைகளைத் தாராளமாகச்செய்யவேண்டும்.

V. K. T.


## விளம்பரம்.

### தேக்கு, தேக்கு.

பர்மா தேக்கு வியாபாரக்கம்பனி

அரியாத, அரிந்த தேக்குமரங்கள் பலகைகள், தளப்பலகை, நிலையன்னல்களுக்குரிய மரம், கதவுச்சட்டம். தேக்கஞ்சிலாகை எதுவும் தேவையான அளவுகளில் கேட்ட உடனே அனுப்பப்படும், றெயிற்செலவு தள்ளியாழ்ப்பாணவிலைக்குக் குறையக் கொடுப்போம் ஒருமுறை ஓடர்செய்து பார்க்கவும்

பர்மா தேக்குவியாபாரக்கம்பனி
207, கிரண்ட்பாஸ் றோட்
கோழும்பு

Burma Teak Trading Company.,
207, Grand pass Road.
COLOMBO.



## SAVE MONEY!

AND MAKE ALL YOUR PURCHASE FROM US

We are Direct Importers of Portland cement, Barbed Wire, Iron Bars, Expanded Metal, Galvanized Corrugate Roofing Sheets, Galvanized Plain Sheets, Asbetos Cement Corrugated Roofing Sheets and Flat Sheets for Ceiling and partitions and all other buildings materials.

We import all Hardware goods direct from England and the Continent and are therefore able to offer better prices than Local Dealers.

Please make your enquiries either from our Branch Office.

N. VAITILINGAM & Co.
Grann bazaar,
Jaffna.
or from us
N. VAITILINGAM & Co.

Estate Suppliers & Hardwre Merchants.
31, Third Cross Street,
Colombo.

Telephone, 2216
Telegrams:--'Envaitilin"



## விளம்பரம்.

### கொழும்பு மூன்றாங்குறுக்குத்தெருவில் இருக்கும் எங்கள் சாப்பில்

வகைவகையான இரும்புச்சாமான்கள் பித்தளைச் சாமான்கள் செப்புக் கம்பிகள், பித்தளைக் கம்பிகள், சுபக்கம்பிகள், மண்வெட்டி, பிக்கான்வகைகள், அலவாங்குகள். இரும்புப்பூட்டுவகைகள் பித்தளை பூட்டுவகைகள், சார்சிப்பூட்டுகள், பெட்டிப்பூட்டுகள், எண்ணெவகைகள், மைவகைகள், வாணிசுவகைகள்; இரும்புக்கட்டில்கள்; பித்தளைக்கட்டில்கள் பிணைச்சல்வகைகள், திறந்துவகைகள், வீடுக்கட்டிடத்துக்கு வேண்டிய புதுவிதமான சகலதினுசுகளும் மிகஉயர்ந்த இனமான தரைத்த இனமான சகல சாமான்களும் சில்லறையாகவும் தோகையாவும் பெற்றுக் கொள்ளலாம்— யாழ்ப்பாணத்திலுள்ள கடைகளுக்கும் கொந்திறந்துக் காரருக்கும் கொடுக்கும் விலையில் சில்லறைக்கு உடனே அனுப்பி வைப்போம்.

### ஒருமுறை எழுதிப்பாருங்கள்

அமெரிக்கா, இங்கிலாந்து சேர்மனி, யப்பான், முதலியஇடங்களிலிருந்து நேரே அழைப்பிக்கிறோம்.

சகலவிதமான கண்ணாடிகளும் நிறக்கண்ணாடிகளும் வேண்டிய இனத்தில் வேண்டிய அளவில் பெற்றுக் கொள்ளலாம். ஓடர் செய்து அடுத்த நாளில சாமான்கள் கையிலிருக்கச் செய்வோம்.

விலாசம்,

ஏ எல் எம். அப்துல் லாத்தில்
3. மூன்றாம்குறுக்குத்தெரு.
கொழும்பு


Printed at the Sri Ganesha Press Jaffna, Edited & published by Mr. Joel Paul, Building Contractor, Secretary the Jaffna Depressed Tamils Service League on behalf of the Service League at Tellippalai.